## ஆங்கிலம் இரண்டாவது மொழி (ESL)

ஆங்கிலம் இரண்டாவது மொழியாக (ESL) கற்பதற்கான வகுப்பைப் பெறுவது இலகுவானது.

### படி 1: கனடாவில் உங்கள் குடியுரிமை அந்தஸ்து என்ன?

கற்க விரும்பும் எல்லா வயது வந்தோரையும் நாங்கள் வரவேற்கின்றோம். நீங்கள் கனடாவில் வசிப்பவராயின் எமது வகுப்புக்கள் இலவசம். நுழைவுத் தகுதியை அறிய கீழே பார்க்கவும்.

### கனடாவில் வசிப்பவர்கள்

கனடாவில் வசிப்பவர்கள் என்ற தகுதியைப் பெறுவதற்கு நீங்கள்:

- 18 வயது அல்லது மேற்பட்டவராக, பகல் நேர பாடசாலையில் பதிவு செய்யாமல் இருப்பவராக மற்றும் உங்கள் முதல் மொழி ஆங்கிலம் இல்லை என்றால், மேலும்
- கனடிய பிரஜாவுரிமை (கனடாவிற்கு வெளியே பிறந்தவர்), நிரந்தர குடியுரிமை, அங்கீகாரம் பெற்ற அகதி (Convention Refugee) அல்லது அகதி நிலை கோரியவர்( Refugee Claimant), அல்லது
- வாய்ப்புக்கள் ஒன்டாரியோவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் மூலம் மாகாணத்தால் நியமிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்தவர்.
- மாகாணத்தால் நியமிக்கப்பட்டவர் ஆனால் நிரந்தர குடியுரிமை தகுதி இன்னமும் நடைமுறைப் படுத்தப்படாதவர்.
- கனேடிய அனுபவப்பட்ட வகுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக வேலையாள் அல்லது அவரைச் சார்ந்தவர்.
- கூடத் தங்கியிந்து பராமரிப்பவர் திட்டத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு வீட்டு வேலையாள்.

மேலே கூறப்பட்டுள்ள பிரிவுகளில் நீங்கள் தகுதி பெற்றிருந்தால், இரண்டாவது படிக்குச் செல்லவும்.

### படி 2: உங்கள் வகுப்பைக் கண்டறியவும்

கடந்த 12 மாதங்களில் ஆங்கில வகுப்பில் ( ESL) இருந்தீர்களா? **இல்லை என்றால்**

வை.எம்.சி.ஏ ( YMCA) மதிப்பீட்டு மையத்தை **416.925.5462** என்ற இலக்கத்தில் அழைத்து உங்கள் மொழி அறிவை மதிப்பீடு செய்வதற்கான சந்திப்பு நேரத்தைக் குறிக்கவும். நீங்கள் இங்கு தங்கி உள்ளீர்கள் என்பதற்கு அத்தாட்சி காட்ட வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்:

- நிரந்தர வதிவுரிமை (பி.ஆர்) அட்டை
- அகதி உரிமை கோரி விண்ணப்பிக்க விரும்புவதற்கான பத்திரம்
- அகதி உரிமை கோரிய ஆவணம்
- அகதி கோரிக்கை ஏற்றதற்கான பத்திரம்
- கனேடிய குடியுரிமை (சிட்டிசன்) அட்டை
- கனேடிய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்)
- வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் வாய்ப்புக்கள் ஒன்டாரியோவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் மூலம் மாகாணத்தால் நியமிக்கப்பட்டவர் என்பதற்கான கடிதம்
- கனடா குடியுரிமை, குடிவரவு துறை நிரந்தர வதிவுரிமை பெற்றதை உறுதியளிக்கும் கடிதம்
- கூடத் தங்கியிந்து பராமரிப்பவர் திட்டத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டவர் என்று கனடா குடியுரிமை மற்றும் குடிவரவு துறை வழங்கிய வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம்

சந்திப்பு நேரங்கள் காலை, மாலை மற்றும் வார இறுதி நாட்களில் உள்ளன; கீழே தரப்பட்டுள்ள இடங்களின் பட்டியலைப் பார்க்கவும். மதிப்பீடு செய்தபின், உங்களை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்குப் பதியலாம். அச்சடித்துக் கொடுத்த பாடப் பரிந்துரைப் படிவத்தை நீங்கள் முதல் நாள் வகுப்பிற்குச் செல்லும் பொழுது கொண்டு செல்லவும். உதவி தேவைப்படின் **416.338.4300** இலக்கத்தில் வை.எம்.சி.ஏ அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

## YMCA Assessment and Referral Centres




**20 Grosvenor Street, 3rd Floor**




**1530 Albion Road, Unit 83 (Inside the Albion Centre)**

North-West
**Toronto Dufferin Street YMCA Centre**




**4580 Dufferin Street, 2nd Floor**

Scarborough
**Toronto Milner Business Court YMCA Centre**




**10 Milner Business Court, Suite 600**

North-East
**Toronto Consumers Road YMCA Centre**




**251 Consumers Road, Suite 110**

கடந்த 12 மாதங்களில் ஆங்கில வகுப்பில் ( ESL) இருந்தீர்களா? **ஆம் என்றால்**

இடங்களின் பட்டியலையும் அவற்றுக்குரிய நிலைகளையும் அறிய **416.338.4300**. இலக்கத்தில் வை.எம்.சி.ஏ (YMCA) அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் அல்லது www.ESLtoronto.ca. என்ற இணையத்தளத்தை பார்க்கவும். பரிந்துரைப்படிவத்தில் உள்ள உங்கள் இலக்கத்தை ஆயத்தமாக வைத்திருங்கள். அல்லது உங்கள் மொழி நிலையில் வகுப்பு நடக்கும் இடம் தெரிந்தால், அங்கு செல்லலாம். நீங்கள் கொண்டு செல்ல வேண்டியவை: உங்கள் குடிவரவுப் பத்திரம் மற்றும் படமுள்ள அடையாள அட்டை. மேலும்;

- பரிந்துரைக்கப்பட்ட உங்கள் மாணவ எண் (மதிப்பீட்டின் போது உங்களுக்குக் கொடுக்கப்பட்டது) அல்லது
- நீங்கள் கடைசியாகப் படித்த வகுப்பிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட படிவம்

## விருந்தாளிகள்:

நீங்கள் கனடாவிற்கு விருந்தாளி அல்லது மாணவ நுழைவு அனுமதி (விசா) நிலையில் இருக்கின்றீர்கள் எனில், விருந்தாளிகளுக்கான ஆங்கில வகுப்பில் $7 / கற்பிக்கும் மணி நேரம் (வரி உள்ளடக்கியது) படி சேரலாம். நீங்கள் குறைந்தது இரண்டு வாரங்களுக்குப் பதிவு செய்து, ஆரம்ப மதிப்பீட்டிற்கான $60 வகுப்பிற்குச் சேர முதல் செலுத்த வேண்டும். சந்திப்பு நேரம் குறித்த பின்பு மதிப்பீடுகள் Bickford Centre (777 Bloor Street West) என்ற இடத்தில் நடைபெறும். **416.393.0532** இலக்கத்தில் தகவல் பெறலாம். நாங்கள் பணம், காசோலை மற்றும் உறுதிபடுத்தப்பட்ட காசோலை (பணம் பெறுபவர்: Toronto District School Board) மூலம் கட்டணம் பெறுவோம். செலுத்திய கட்டணத்தைத் திருப்பிப் பெற முடியாது.